19.02.2009

**இல.கணேசன்**
**மாநில தலைவர்**

## பத்திரிகை செய்தி

------------------------------

சாயப் பட்டறைகளால் 1995 ஆம் ஆண்டு முதல் நொய்யல் ஆறு மாசுபட்டு வேளாண்மை பாதிப்புக்குள்ளானது. பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு இழப்பீடு வழங்க மதிப்பீடு செய்யுமாறு நீதிபதி பாஸ்கரன் தலைமையில், சுற்றுச் சூழல் பாதிப்பு ஆணையத்தை அமைக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனடிப்படையில் நொய்யல் ஆற்றுப்படுகையில் உள்ள 8 ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட 68 கிராமங்களைச் சார்ந்த 28,536 உழவர்களுக்கு 2002-2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வேளாண்மை பாதிப்புக்கு நஷ்ட ஈடாக ரூ.24.8 கோடி தொகையை இழப்பீடாக உழவர்களுக்கு வழங்குமாறு நீதிபதி பாஸ்கரன் தலைமையிலான ஆணையம் பரிந்துரை செய்தது. இதனை ஏற்றுக் கொண்ட சென்னை உயர்நீதிமன்றம் இழப்பீடு வழங்க உத்தரவிட்டது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு பரிந்துரைத்தபடி ஏக்கருக்கு ரூ.40,000 வழங்காமல் ஏக்கருக்கு ரூ.14,000 முதல் ரூ.500 வரை சில உழவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டு வருகிறது. மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பல உண்மையான உழவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படவில்லை. நிலத்தின் பெயரை உடனடியாக உழவர்களின் பெயருக்கு மாற்ற வேண்டும் போன்ற பொருந்தாத தகுதி வரையறைகளை வருவாய் துறையினா் முன்வைத்து பெரும்பான்மையான பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு இழப்பீடு இல்லாமல் செய்து வருகிறார்கள். 12 ஆண்டுகளாக சாயப்பட்டறைகளின் கழிவுகளால் நீர்வள ஆதாரத்தை இழந்து 68 கிராம மக்கள் போதிய குடிநீரின்றியும், உழவுத் தொழிலையும் இழந்து வாழ்வாதார உரிமைகளுக்காக போராடி வருகிறார்கள். இந்தப் பகுதி பஞ்சாயத்து நிர்வாகம் போதிய குடிநீர் அளிக்க முடியாமலும், வருமானம் இல்லாமலும், குடிநீர் வரியை கட்டமுடியாமலும் தவித்து வருகிறார்கள்.

எனவே,

- பாதிக்கப்பட்ட 68 கிராமத்தை சேர்ந்த அனைத்து உழவர்களுக்கும் பாரபட்சமின்றி வரி செலுத்தும் ரசீதை தகுதியாக ஏற்றுக் கொண்டு ஏக்கருக்கு தலா ரூ.40,000 வழங்குதல்.
- விடுபட்ட அனைத்து உழவர்களையும் கிணறு இருந்தாலும் இல்லாவிட்டாலும், தனிப்பட்டா இருந்தாலும் இல்லாவிட்டாலும் வரி செலுத்திய ரசீதுப்படி இழப்பீடு வழங்கும் பட்டியலில் இணைத்தல்.
- நொய்யல் ஆற்றின் கரையோரம் உள்ள பாதிக்கப்பட்ட அனைத்து கிராம பஞ்சாயத்துகளுக்கும் நொய்யல் ஆற்றின் மாசுபாடு நீக்கப்படும் வரை குடிநீர் வரியையும், நில வரியையும் நீக்குதல்.
- புதிய கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்குதல் மற்றும் மேல்நிலை தொட்டிகளின் கொள்ளளவை அதிகரித்தல்.
- பாதிக்கப்பட்ட 68 கிராமங்களிலும் நீர்பிடிப்பு பகுதிகளில் குளம் குட்டைகளை தூர்வாரியும்,
- பண்ணை நீர் குட்டைகள் அமைத்தும்,
- நொய்யலில் வீணாக கலக்கும் ஓடைகளில் தடுப்பு சுவர் எழுப்பியும்,
- புறம்போக்கு நிலங்களில் புதிய குளங்கள் கட்டியும்,
- மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் அமைத்தும் நீர்வள ஆதாரத்தை நிரந்தரமாக பெருக்க புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- நொய்யல் ஆற்றில் நிரந்தரமாக சாயக்கழிவுகள் கலக்காத வண்ணம், சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பை உடனடியாக நிறைவேற்றுதல் ஆகிய அவர்களது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றிட தமிழக அரசை வற்புறுத்துகிறேன்.

தாயக பணியில்

**(இல. கணேசன்.)**